



முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம் கல்லணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில்துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் தண்ணீரை நேற்று முன்தினம் (31.07.2024) திறந்து வைத்தார்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மா. பிரதீப் குமார் (திருச்சி), திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் (தஞ்சாவூர்), ஏ.பி.மகாபாரதி (மயிலாடுதுறை), திருமதி.தி.சாருஸ்ரீ (திருவாரூர்), திருமதி.மு.அருணா (புதுக்கோட்டை). சட்டமன்ற உறுப்பினர்கள் கதிரவன் (மண்ணச்சநல்லூர்), துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை). என்.அசோக்குமார் (பேராவூரணி), வி.பி. நாகைமாலி (கீழ்வேளூர்), தாட்கோ தலைவர் இரா.மதிவாணன், மாநகராட்சி மேயர்கள் மு.அன்பழகன் (திருச்சிராப்பள்ளி), சண். இராமநாதன் (தஞ்சாவூர்), மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர்கள் சண்முகம், சிவக்குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், நீர்வளத்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.

### கூடுதல் பேருந்துகளை இயக்குவது தொடர்பாக,

# எண்ணூர்-திருவொற்றியூர் பேருந்து நிலையங்களில் ஆய்வு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் மேற்கொண்டார்

சென்னை, ஆக. 2 -

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 29.07.2024 அன்று மாநகர் போக்குவரத்துக் கழகத்தை சார்ந்த எண்ணூர் பணிமனை மற்றும் எண்ணூர் பேருந்து நிலையத்திலும், அதனைத் தொடர்ந்து திருவொற்றியூர் பேருந்து நிலையத்திலும், பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக ஆய்வு செய்து, அடிப்படை வசதிகள் குறித்து அங்கு இருந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

"எண்ணூரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.1.5 கோடியும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.1.29 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. 6 மாத காலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும். மேலும் பொது மக்களின் கோரிக்கையை நிறை வேற்றும் வகையில் அதி காலை நேரத்தில் பேருந்து சேவை அதிகரிப்பதோடு, அனைத்து பேருந்துகளும் சரியான நேரத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எண்ணூரில் இருந்து டோல் கேட் வரை பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து கழகத்திற்கு புதியதாக 7,200 பேருந்துகள் வாங்கு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வாரத்தில் தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் அந்தந்த மாவட்டங்களில் 300க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதே போல் விரைவில் சென்னை மாநகரத்தில் புதிய பேருந்துகள் இயக்கப்படும். பழைய பேருந்துகள் சீரமைக்கப்படும்".

இவ்வாய்வின் போது, திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் எஸ். நடராஜன், பொது மேலாளர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

### திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் - அமைச்சர் சி.வெ.கணேசன்

# டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2 பயிற்சி வகுப்புகள் ஆய்வு!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர் ஆக. 2-

திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு நடைபெற்று வரும் டி என்.பி.எஸ்.சி. குரூப் 2 பயிற்சி வகுப்புகளை ஆய்வு செய்து பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறரார். அந்த வகையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி 1 , 2 , 4 ஆகிய தேர்வு, ஒன்றிய அரசின் தேர்வுகளான ஸ்டாப் செலக்சன் கமிஷன் ரயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு எம் எல் சி போன்ற ஒன்றிய அரசின் வேலைக்கான பயிற்சி வகுப்புகள் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன. தொழிற்படிப்புகள் படித்தால் மட்டுமே வேலை கிடைக்கும் என்ற நிலையை மாற்றி கலை மற்றும் அறிவியல் கல்லூரி குரூப் படித்தவர்கள் இந்த பயிற்சியின் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

ஒன்றிய அரசின் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தமிழ்நாட்டில் 14 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்ற தகவலை தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று மாணவர்கள் வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர். ஆகவே இந்த பயிற்சி வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கடின உழைப்புடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். உங்கள் முயற்சியை நான் கைவிடாதீர்கள். முயற்சியும் பயிற்சியும் இருந்தால் தேர்வில் வெற்றி பெற்று நீங்கள் விரும்பும் வேலையை பெறுவீர்கள்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தமிழ் இலவச பாடத் தொகுப்பு கையேட்டினை மாண்பு மிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்

இந்நிகழ்வில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், மண்டல இணை இயக்குனர் (வேலை வாய்ப்பு) ஆர். பிரபாகரன், உதவி இயக்குநர்கள் விஜயா, (மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் ரவிந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், மற்றும் (மாவட்ட திறன் பயிற்சி) அலுவலர்கள் உள்ளனர்.





விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில்மாவட்ட அவைத் தலைவரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டப் பொருளாளர் ரமணன், துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த்.திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாநகர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த எண்ணூர் பணிமனையில் ஆய்வு செய்தார். இவ்வாய்வின் போது, திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் எஸ்.நடராஜன், பொது மேலாளர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

# திருப்பத்தூரில் மாணவர்களுக்கு சீருடைகள் - மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஆக. 2 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பள்ளி வளாகத்தில் தமிழக முதல்வரின் விலையில்லா மிதி வண்டிகள் 11,381 மாணவ, மாணவிகள் 1 முதல் 8 வகுப்புவரை உள்ள மாணவ மாணவிகள் 68725 சீருடைகள் ஆகியவற்றினை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் நடைபெற்றது. முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் 68725 சீருடைகள் 11381 முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது. தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. அனைத்து துறைகளும் பல்வேறு திட்டங்களை தீட்டி அந்த திட்டங்கள் முறையாக நிறைவேற்றப் படுகின்றது. அதற்கான சான்று இன்று மாணவ மாணவிகளுக்கு சீருடைகள் மற்றும் விலையில்லா மிதிவண்டி வழங்குவது சான்றாகும். முன்பு பள்ளிகளில் சீருடை கிடையாது. மாணவரிடையே இதனால் பாரபட்சமான சூழ்நிலை நிலவியது. ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.

இதை உணர்ந்த பெருந்தலைவர் காமராஜர், தலைவர் கலைஞர் அவர்கள் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களும் சீருடை திட்டத்தினை கொண்டு வந்தார்கள். அத்திட்டம் தொடர்ந்து தமிழக முதல்வர் தளபதி அவர்களால் இன்று அவைகள் நிறை வேற்றப் பட்டு வருகின்றது. இதனால் மாணவ மாணவியர்களிடையே பாகுபாடு காண முடியாது. நன்கு கல்வி பயில முடியும். மாணவ மாணவிகள் நன்றாக படித்து அவர்கள் விரும்பும் பணிக்கு செல்வதால் நாட்டின் பொருளாதாரம் உயரும் .தமிழக முதல்வர் தளபதி தலைமையிலான ஆட்சியில் ஆரம்பக் கல்வி முதல் கல்லூரி வரை கட்டணம் இல்லாமல் படிப்பதற்கான உதவியை செய்து வருகிறார். தமிழகம் கல்வியில் முதல் மாநிலமாக வருவதற்கு முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் முயற்சி காரணமாகும். அதனை தொடர்ந்து தமிழக முதல்வர் அவர்களும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல்விக்கான நிதிகளையும் தாராளமாக ஒதுக்கி வருகிறார். தொலைநோக்கு பார்வையுடன் முன்னாள் முதல்வர்கள் காமராஜர் தலைவர் கலைஞர் ஆகியோர் வழியில் தளபதி அவர்களும் செயல்பட்டு வருகிறார். காமராஜர் காலத்தில் ஓராசிரியர் பள்ளி இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில் ஈராசிரியர் பள்ளியாக மாற்றப்பட்டது. தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து பள்ளிகளில் அனைத்து வசதிகளும் செய்து தருமாறு உத்தரவிட்டுள்ளார் .இதனால் தமிழகம் இந்தியாவில் கல்வியில் முதல் இடம் பெற்றுள்ளது. அழியாத செல்வம் என்பது கல்வியாகும். கல்வியை யாரும் திருட முடியாது. உங்களுடைய தேவைகளை கேட்காமலேயே தமிழக முதல்வர்அவர் கள் நிறைவேற்றித் தருகிறார். எனவே மாணவ - மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டுகளிலும் கவனம் செலுத்த வேண்டும். முதல் இடம் பெற வேண்டும். விளையாட்டில் ஈடுபடுவதால் உடல் ஆரோக்கியம் அடையும் .மன நிம்மதி ஏற்படும். கடந்த அ.தி.மு.க

ஆட்சியில் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு உரிய நேரத்தில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட வில்லை . ஆனால் முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்றதும் பிறப்பித்த உத்தரவின் பேரில் உரிய காலத்தில் விலையில்லா மிதிவண்டிகள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படு கிறது . மிதிவண்டி வழங்கப்படுவதால் மாணவ மாணவிகளின் உடல்நலம் ஆரோக்கியமாக இருக்கும். மாணவ -மாணவிகள் சைக்கிளில் செல்லும் பொழுது போக்குவரத்து விதிகளை மதிக்க வேண்டும். அதன்படி நடந்து கொள்ள வேண்டும். ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் .இந்த மிதிவண்டிகளை முறையாக பராமரிக்க வேண்டும். இதனால் உங்களுக்கு நீண்ட நாட்களுக்கு இந்த மிதிவண்டி உபயோகமாக அமையும். இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார். நிகழ்ச்சியில் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், துணைத் தலைவர் கான் முகமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் .இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி ரதிதேவி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் திருமதி ஜெயமணி, தலைமை ஆசிரியர்கள் திருமதி தவமணி, மலர்வழி, ரசியா பேகம், மாவட்ட கல்வி அலுவலர் உதயகுமார் தாசில்தார் மாணிக்கவாசகம், பேரூர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன், பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜிம் கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி . ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, புதூர் கண்ணன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.. சாக்ளா, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட ஆசிரியர்கள்,

பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியில் தி.புதுப்பட்டி அரசுபள்ளி,நாகப்பா மருதப்பா பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய மாணவ மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகள், இலவச சீருடைகளை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்.

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தில் கழகத்தினர்

# டிஜிட்டல் பேனர் வைப்பதை தவிர்க்க வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்!

கள்ளக்குறிச்சி, ஆக. 2-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது,

தமிழ்நாடு முதலமைச்சரும்,கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் அனைவரும் குடும்ப சுபநிகழ்ச்சிகள் மற்றும் கழக நிகழ்ச்சிகளின் போது பொது இடங்களில் டிஜிட்டல் பேனர்கள் வைப்பதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன, மேலும் வருகின்ற மழைக்காலங்களில் டிஜிட்டல் பேனர்கள் வைப்பதால் விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன, எனவே தலைமைக் கழகத்தின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் அனைவரும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் டிஜிட்டல் பேனர்களை வைப்பதை அறவே தவிர்த்திட வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர மன்ற முன்னாள் துணை தலைவரும் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளரும் கழக மூத்த முன்னோடியுமான முல்லை பன்னீர்செல்வம் 31.07.2024 அன்று மாலை உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துகொள்கிறோம். அன்னாரின் உடலுக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். மேலும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் கண்கள் தானம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியம் கச்சநகரம் ஊராட்சியில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க., கட்சிகளைச் சேர்ந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவரூாமன என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் கீழையூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் சுரேஷ், கிளை செயலாளர்கள் செந்தில்குமார், ஞானசேகரன், சிங்காரவேல், ஒன்றிய பிரதிநிதி மணிகண்ணன், இளைஞர் அணி விக்னேஷ் மற்றும் ஆறுமுகம், கண்ணதாசன், பாஸ்கர் ஆகியோர் உள்ளனர்.